## தேசிய சமூக அபிவிருத்தி நிறுவகம் - 2016

தேசிய சமூக அபிவிருத்தி நிறுவகத்தின் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கிய கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புகளை உள்ளடக்கிய 2016 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13(1) ஆம் பிரிவு மற்றும் 1992 இன் 41 ஆம் இலக்க தேசிய சமூக அபிவிருத்தி நிறுவக அதிகாரச்சட்டத்தின் 18 ஆம் பிரிவு என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. நிதி அதிகாரச்சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரம் நிறுவகத்தின் ஆண்டறிக்கையுடன் பிரசுரிக்கப்பட வேண்டும் என நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

### 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்கத் தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

### 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000-1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் நிறுவகத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி நிறுவகத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) ஆம் மற்றும் (4) ஆம் உபபிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையையும் பரப்பையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிபு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்குகின்றன.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.4 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

## 2. நிதிக்கூற்றுக்கள்

## 2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து தேசிய சமூக அபிவிருத்தி நிறுவகத்தின் 2016 திசெம்பர் 31 இல் இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 2.2.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு பௌதீக ரீதியில் கணிப்பிட்ட இருப்பு ரூபா 541,201 ஆக இருந்த போதிலும், அந்த இருப்பு ரூபா 836,338 ஆக நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டிருந்தது. இதன் காரணமாக மீளாய்வாண்டின் இறுதியிலுள்ள இருப்பு மீதி ரூபா 295,137 இனால் அதிகரித்துக் காண்பிக்கப்படுவதுடன் ஆண்டின் பற்றாக்குறையும் அப்பெறுமதியால் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஆ) சமூக அபிவிருத்தி நிறுவகத்திற்கு மீளாய்வாண்டிற்காக திறைசேரியிலிருந்து கிடைத்த ரூபா 5,832,151 தொகையான மூலதன மானியம் ஆண்டின் வருமானமாகக் கணக்கீடு செய்யப்பட்டமையால் ஆண்டின் பற்றாக்குறையும் அப்பெறுமதியால் குறைத்துக் காண்பிக்கப்பட்டதுடன் திறைசேரி மானியத்தின் ஆரம்ப மீதி ரூபா 14,571,241 ஒப்பிடக்கூடியதாக நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) முன்னைய ஆண்டு மற்றும் மீளாய்வாண்டிற்குரிய நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்காக கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களத்திற்குச் செலுத்த வேண்டிய கணக்காய்வுக் கட்டணத்திற்காக நிதிஏற்பாடுகள் ஒதுக்கப்பட்டிருக்கவில்லை.

## 3. நிதி மீளாய்வு

### 3.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2016 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிறுவகத்தின் நிதி விளைவுகள் ரூபா 2,739,560 பற்றாக்குறையாக இருந்ததுடன் அதற்கு எதிராக முன்னைய ஆண்டிற்கான மிகை ரூபா 10,428,163 ஆனமையால் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டின் நிதி விளைவுகள் ரூபா 13,167,723 வீழ்ச்சியைக் காண்பித்தது. மீளாய்வாண்டில் பாடநெறி வருமானம் ரூபா 3,415,400 இனால் குறைவடைந்தமையும் ஊழியர் ஊதியம் மற்றும் பாடநெறிக் கட்டணச் செலவினம் என்பன ரூபா 8,369,465 இனால் அதிகரித்தமையும் மேற்கூறப்பட்ட வீழ்ச்சி தொடர்பில் பிரதானமாகத் தாக்கமளித்திருந்தது.

மீளாய்வாண்டினதும் கடந்த 04 ஆண்டுகளினதும் நிதி விளைவுகளை ஒப்பீடு செய்தபோது 2012 ஆம் ஆண்டு முதல் 2014 ஆம் ஆண்டு வரை நிதிசார் பற்றாக்குறையொன்று காணப்பட்ட போதிலும் 2015 ஆம் ஆண்டில் நிதி மிகையொன்று ஏற்பட்டு மீண்டும் 2016 ஆம் ஆண்டின் போது நிதிப்பற்றாக்குறையொன்று ஏற்பட்டிருந்தது. எவ்வாறாயினும் ஊழியர் ஊதியம் மற்றும் நடைமுறையல்லாச் சொத்துக்களுக்கான பெறுமானத்தேய்வு ஏற்பாடு என்பவற்றைக் கவனத்திற்கொள்ளும் போது, 2012 ஆம் ஆண்டில் ரூபா 30,319,643 ஆகக் காணப்பட்ட நிறுவகத்தின் பங்களிப்பு தொடர்ச்சியாக அதிகரித்து 2016 ஆம் அண்டின் போது ரூபா 72,068,787 ஆக இருந்தது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றல்

1992 இன் 41 ஆம் இலக்க தேசிய சமூக அபிவிருத்தி நிறுவக அதிகாரச்சட்டத்தின் 03 ஆம் பிரிவின் பிரகாரம் பின்வரும் நோக்கங்களை நிறைவேற்ற வேண்டியிருந்தது.

(அ) சமூக வேலை மற்றும் சமூக அபிவிருத்தி கல்வி மேம்பாட்டிற்கான திட்டம், நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் வேலை நடவடிக்கைகள் தொடர்பாக அமைச்சருக்கு ஆலோசனை வழங்குதல்.

(ஆ) சமூக வேலை, சமூக அபிவிருத்தி தொடர்பான பட்டம் மற்றும் பட்டப்பின்படிப்பு பாடநெறிகளை நடாத்துதல்

(இ) சமூக நலன்புரித்திட்டம் மற்றும் சமூக அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்கள் தொடர்பாக கற்கைகளை நடாத்துதல் மற்றும் அவற்றை மேம்படுத்துதல்.

(ஈ) சமூக வேலைகளின் போது தொழில்நுட்ப உபயோகப்படுத்துதலை உள்ளடக்கிய சமூக வேலைகள் மற்றும் சமூக அபிவிருத்தி கல்வித் திட்டத்தில் வடிவமைக்கப்பட்ட ஆய்வொன்றை ஆரம்பித்தல் மற்றும் மேம்படுத்துல்.

(உ) சமூக நலன்புரி பதவியணியின் தொழில்ரீதியானதும் முகாமைத்துவரீதியானதுமான இயலுமையை அபிவிருத்தி செய்வதற்கான ஏற்பாடுகளைத் திட்டமிடல்.

(ஊ) சமூக வேலை மற்றும் சமூக அபிவிருத்தி தொடர்பாக நிபுணத்துவ சேவையினை அரசாங்கத்திற்கும் ஏனைய அங்கீகரிக்கப்பட்ட அமைப்புகளுக்கும் வழங்குவதற்கு திட்டமிடல்.

(எ) அதற்குச் சமமான நோக்கங்களையுடைய ஏனைய நிறுவனங்களுடன் ஒத்துழைப்புடன் செயற்படுதல்.

நிறுவகத்தால் மீளாய்வாண்டிற்காக அதன் 04 பிரதான பிரிவுகளுக்காக செயல்நடவடிக்கைத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருந்ததுடன் அதற்குரியதாக மீளாய்வாண்டில் தயாரிக்கப்பட்ட செயலாற்றல் அறிக்கையின் பிரகாரம் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) சமூக சேவைக் கல்லூரி

---

i. மீளாய்வாண்டிற்காக சமர்ப்பிக்கப்பட்ட திருத்தப்பட்ட செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் 2016/2020 இற்கான சமூக வேலைகள் தொடர்பான அடிப்படை பட்டப் பாடநெறிக்காக சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளில் 180 மாணவர்களை சேர்த்துக் கொள்வதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும், ஆங்கில மொழிக்கு மாத்திரம் 55 மாணவர்கள் சேர்க்கப்பட்டிருந்ததுடன், சிங்களம் மற்றும் தமிழ் மொழிகளுக்காக மாணவர்கள் உள்ளீர்க்கப்பட்டிருக்கவில்லை.

ii. ஒவ்வொரு ஆறு மாதங்களுக்கான விரிவுரை மணித்தியாலங்கள் 100 சதவீதம் பூர்த்தி செய்யப்பட்டதன் பின்னர் மாத்திரம் உரிய பரீட்சையை நடாத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியிருந்த போதிலும், 100 விரிவுரை மணித்தியாலங்கள் பூர்த்தி செய்யப்படாமல் பரீட்சை நடாத்தப்பட்டிருந்தது.

iii. சமூக வேலை தொடர்பான பட்டப்படிப்பிற்காக 2013 ஆம் ஆண்டு முதல் 2015 ஆம் ஆண்டு வரை மூன்று மொழிகளிலும் பதிவு செய்துள்ள மாணவர்களின் எண்ணிக்கை மீளாய்வாண்டின் இறுதியளவில் 30 சதவீதத்தால் குறைவாக்கப்பட்டிருந்தது.

iv. சமூக வேலை பட்டப்பாடநெறி, சமூகவேலை டிப்ளோமா மற்றும் சமூக வேலை உயர் டிப்ளோமாக்களுக்குரிய 2012/2016 , 2013/2017, 2014/2018, 2015/2019 ஆம் கல்வியாண்டுகளில் பரீட்சை மீளாய்வாண்டின்போது நடாத்தப்பட வேண்டியிருந்த போதிலும், அந்தப் பரீட்சைகள் நடாத்தப்பட்டிருகக்வில்லை.

(ஆ) பயிற்சிப் பிரிவு

---

i. அரச மற்றும் அரசல்லாத நிறுவன உத்தியோகத்தர்களுக்கும் தொண்டர் அமைப்புக்களின் பதவியணியினர் மற்றும் உயர்தரம் சித்தியடைந்த மாணவர்களுக்காகவும் கிளிநொச்சி மாவட்ட செயலகத்தில் நடாத்தப்பட்ட ஆலோசனை தொடர்பான டிப்ளோமா தமிழ் மொழி மூல பாடநெறி 2014 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டு 2015 ஆம் ஆண்டின் போது பூர்த்தி செய்யப்பட வேண்டியிருந்தது. எவ்வாறாயினும் டிப்ளோமா பாடநெறியின் இறுதிப் பெறுபேற்றை வழங்கியதன் பின்னர் டிப்ளோமா சான்றிதழ் கையளித்தல் ஒரு வருடமும் 03 மாதங்களும் தாமதிக்கப்பட்டிருந்தது.

ii. அரச மற்றும் அரசல்லாத நிறுவன உத்தியோகத்தர்களுக்கும் தொண்டர் அமைப்புக்களின் பதவியணியினர் மற்றும் உயர் தரம் சித்தியடைந்தமைக்காக முதியோர் விஞ்ஞானம் மற்றும் முதியோர் பாதுகாத்தல் தொடர்பான டிப்ளோமா பாடநெறியை 2014/2015 ஆம் ஆண்டுகளின் போது நிறுவகத்தில் நடாத்துவதற்கு திட்டமிடப்பட்டிருந்ததுடன் அதற்காக 25 மாணவர்கள் பங்குபற்றியிருந்தனர். இந்தப் பாடநெறிகாக 2015 ஆம் ஆண்டின் போது பெறுபேறுகள் விநியோகிக்கப்பட்டிருந்த போதிலும், சான்றிதழ் கையளித்தல் ஒரு வருட காலம் தாமதப்படுத்தப்பட்டிருந்தது.

**(இ) சமூக அபிவிருத்தி கொள்கை, ஆராய்ச்சி மற்றும் வெளியீட்டுப் பிரிவு**

---

சமூக அபிவிருத்தி கொள்கை தயாரித்தல், ஆராய்ச்சிகளை மேற்கொள்ளல் மற்றும் வெளியிடுகளை வெளிக்கொணர்தல் இந்த பிரிவின் மூலம் செய்யப்படுவதுடன் மீளாய்வாண்டின் செயல்நடவடிக்கைத் திட்டத்தின் கீழ் பதின்மூன்று நிகழ்ச்சித்திட்டங்களுக்காக ரூபா 1,323,000 தொகை ஒதுக்கப்பட்டிருந்தது. இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

i. இரத்தினபுரி, அம்பாறை, கிளிநொச்சி மற்றும் தலாவ போன்ற பிரதேச நிலையங்களுக்காக பாடநெறிகளை நடாத்துதல், ஆராய்ச்சி தரவுகளை சேகரித்தல் மற்றும் நேர்முகப் பரீட்சையை நடாத்துதல் மாத்திரம் மேற்கொள்ளப்பட்டிருந்தன. எவ்வாறாயினும் இந்த நிலையங்களில் இதுவரையும் குறித்த பாடநெறிகள் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை.

ii. புதிய தொலைக்காட்சி நாடகங்களில் குடும்ப கட்டமைப்பு தொடர்பில் எழுகின்ற தாக்கங்கள் தொடர்பாக கண்டறியும் ஆராய்ச்சி அறிக்கையை 200 பிரதிகளில் அச்சிடுவதற்கு செயல்நடவடிக்கைத் திட்டத்தில் குறிப்பிடப்பட்டிருந்த போதிலும், மீளாய்வாண்டின் போது 100 பிரதிகள் அளவில் அச்சிடப்பட்டிருந்தமையால் அதன் பௌதீக செயலாற்றல் 50 சதவீதமாகக் காணப்பட்டது. அவ்வாறே எதிர்பார்க்கப்பட்ட திட்டத்தின் படி வெளியீட்டு நூல்கள் மற்றும் கலை ரீதியான நாழிதழ்களை அச்சிடுதல் மிகவும் குறைந்த மட்டத்தில் காணப்பட்டதுடன் உரிய பிரிவு அல்லது நபர்களுக்கு மீளாய்வாண்டின் போது பகிர்ந்தளிக்கப்பட்டிருக்கவில்லை.

**4.2 பதவியணியினர் நிர்வாகம்**

---

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிறுவகத்தின் அங்கீகரிக்கப்பட்ட ஊழியர் எண்ணிக்கை 137 ஆக இருந்ததுடன் உள்ளபடியான ஊழியர் எண்ணிக்கை 113 ஆனமையால் 24 வெற்றிடங்கள் காணப்பட்டன. 04 சிரேஷ்ட விரிவுரையாளர் பதவிகளும், 03 சிரேஷ்ட பயிற்சி உத்தியோகத்தர் பதவிகளும் மற்றும் 03 சிரேஷ்ட ஆராய்ச்சி உத்தியோகத்தர் பதவிகளுமாக 10 பதவிகளும், பேராசிரியர் பதவியும் 2017 யூன் 30 ஆந் திகதி வரை வெற்றிடமாகக் காணப்பட்டது. இந்த விரிவுரையாளர்கள் வெற்றிடமாகக் காணப்படுகின்றமை நிறுவகத்தின் அனேக பாடநெறிகளை உரிய பிரகாரம் நடாத்துவதற்கு முடியாமைக்கு காரணமாக இருந்ததுள்ளது என்பதை கணக்காய்வின் போது புறக்கணிக்க முடியாதிருந்தது.

(ஆ) பணிப்பாளர் (நிர்வாகம் மற்றும் நிதி) பதவியில் பதிற் கடமைக்காக நியமிக்கும் போது அதற்கு அண்மித்த பதவியின் சிரேஷ்ட உத்தியோகத்தரொருவர் பதிற்கடமைக்காக நியமிக்கப்பட வேண்டியிருந்த போதிலும், அந்தப் பதவிக்காக சேவையில் ஈடுபட்டிருக்கின்ற மூன்று உத்தியோகத்தர்கள் இருக்கும் போது அதற்குரிய கீழுள்ள தரமொன்றில் பதவியொன்றில் ஈடுபட்டிருக்கின்ற உத்தியோகத்தரொருவர் நியமிக்கப்பட்டிருந்தார். அவ்வாறே பதிற் கடமை பார்க்கும் பதவியொன்று 03 மாத காலத்திற்கு உட்படுகின்ற போதிலும், உரிய பதவியின் வெற்றிடங்களை நிரப்புவதற்கு 03 வருடங்களுக்கு மேற்பட்ட காலமாக பதவியில் நிரந்தர உத்தியோகத்தரை நியமிக்கும் வரையும் பதிற் கடமை நியமனம் கையளிக்கப்பட்டு சம்பளம் மற்றும் படிகள் செலுத்தப்பட்டிருந்தன.

(இ) அங்கீகரிக்கப்பட்ட ஆட்சேர்ப்பு நடைமுறைகளின் பிரகாரம் பணிப்பாளர் (நிர்வாகம் மற்றும் நிதி) பதவிக்காக உள்ளக விண்ணப்பதாரர்களிடமிருந்து ஆட்சேர்ப்புச் செய்யும் போது தகைமையுடைய ‘‘முகாமைத்துவ சேவைத் தொகுதியின்’’ பதவியொன்றில் முதலாவது தரத்தில் ஆகக் குறைந்தது 05 வருட அனுபவமொன்றைப் பெறவேண்டியது என்ற நிபந்தனை ‘‘ஆய்வு மற்றும் ஆராய்ச்சி சேவை தொகுதியின்’’ பதவியொன்றாக இந்தத் தடவை மாத்திரம் உரித்தாகும் வகையில் திருத்தம் செய்யப்பட்டு ஆய்வு மற்றும் ஆராய்ச்சி சேவைத் தொகுதியின் பதவியொன்றில் சேவையில் ஈடுபட்டிருக்கின்ற கணக்கியல் சம்பந்தமான ஆரம்ப அறிவைக் கொண்டிருக்காத பெண் உத்தியோகத்தரொருவர் 2017 மார்ச் 01 ஆந் திகதி நியமிக்கப்பட்டிருந்தார்.

## 5. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 5.1 உள்ளகக் கணக்காய்வு

நிறுவகத்தின் கட்டமைப்பு வரைபடத்தின் பிரகாரம் உள்ளகக் கணக்காய்வாளர் நேரடியாக நிறுவகத்தின் தலைவருக்கு அறிக்கையிட வேண்டியிருந்த போதிலும், உள்ளகக் கணக்காய்வாளரினால் நேரடியாக பிரதான நிறைவேற்று உத்தியோகத்தரான பணிப்பாளர் நாயகத்திற்கு அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

### 5.2 பாதீட்டுக் கட்டுப்பாடு

மீளாய்வாண்டிற்கான பாதீடு எதிர்பார்க்கப்பட்ட பாடநெறி வருமானங்களையும் செலவினங்களையும் உள்ளடக்கி தயாரிக்கப்படாமையினால் பாதீடானது ஆக்கபூர்வமான முகாமைத்துவக் கட்டுப்பாட்டுக் கருவியாகப் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

## 6. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகளிலுள்ள குறைபாடுகள் அவ்வப்போது நிறுவகத்தின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டிருந்ததுடன் பின்வரும் கட்டுப்பாட்டுத் துறைகள் தொடர்பில் விஷேட கவனம் செலுத்தப்பட வேண்டியுள்ளது.

| | **முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுத் துறைகள்** | | **அவதானிப்புக்கள்** |
|---|---|---|---|
| | ------------------------------------------------ | | ------------------------------------------ |
| (அ) | கணக்கீடு | - | சில கணக்கு வைத்தல்கள் சரியாக இன்மை மற்றும் தீர்க்கப்படாத கணக்கு மீதிகள் காணப்பட்டமை. |
| (ஆ) | பாதீட்டுக் கட்டுப்பாடு | - | பாதீடு தயாரிக்கும் போது திறைசேரி நிதி ஏற்பாட்டிற்கு மேலதிகமாக உழைக்கப்பட்ட வருமானம் கவனத்தில் கொள்ளப்படாமை. |
| (இ) | பதவியணியினர் நிர்வாகம் | - | உரிய தகைமைகளின் அடிப்படையில் உத்தியோகத்தர்கள் நியமிக்கப்படாமை, உத்தியோகத்தர்களுக்கு பயிற்சியளித்தல் மற்றும் கடமைக் காலம் தொடர்பாக சரியான மதிப்பீடின்மை. |